வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 301 of 2023

வழக்கு சாட்சி - PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேலுச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | அமராவதி கவுண்டர் | வயது | : | |
| கிராமம் | : | கோவில்பாளையம் புதூர் அவிநாசிபாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.08.2025.

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.).

**முதல் விசாரணை :** **நாள் : 25.08.2025.**

1)நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 03.07.2023 ஆம் தேதி கோவில்பாளையம் புத்தூரில் எங்கள் வீட்டில் இருந்து நான்கு வீடு தள்ளி ஒரு வீட்டில் பூட்டை உடைத்து ups பேட்டரி மற்றும் பணம் திருடு போனதாக சொன்னார்கள் அது சம்மதமா க மறுநாள் 04.07.2023 ஆம் தேதி காலை 7.00 மணியளவில்அவிநாசிபாளையம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்து கையொப்பம் கேட்டார்கள் நானும் மைத்தீஸ் என்பவரும சாட்சி கையொப்பம் செய்தோம், தற்போது என்னிடம் காட்டடப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த முதலாவது சாட்சி கையெழுத்து **அ.த.சா.ஆ.3** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>முதலாம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1) வள்ளியம்மாள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். அவர்கள் வீட்டில் திருடுபோனது சம்மந்தமாக புகார் கொடுக்க அவருடன் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க நானும் மைத்தீஸ் என்பவரும் சென்றோமா என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோமா என்றால் சரிதான். கையெழுத்துப்போட்ட தாளில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதில் எவ்வாறு திருடு போனது என்ற விவரம் இருந்ததா என்றால் சரிதான். மொத்த நான் எத்தனை கையெழுத்துபோட்டேன் என்றால் ஒரு கையெழுத்து போட்டேன். நான் சொல்லவது பொய் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.08.25 18:57:13 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.